செ.வெ.எண்: 24 நாள்: 17.11.2020

**விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் வட்டத்திற்குட்பட்ட கிராம பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் வட்டத்திற்குட்பட்ட கிராம பகுதிகளில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் வட்டம் ஓமிப்பேர் ஊராட்சியில் வடகிழக்கு பருவமழையின் காரணமாக ஓடை வாய்க்கால் வழியாக செல்லும் மழைநீரினால் பழுதடைந்த பாலத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு அப்பழுதினை நீக்கிட சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு அறிவுறத்தினார்.

தொடர்ந்து நாகல்பாக்கம் ஊராட்சி ராயநல்லூர்-நகர் சாலையின் குறுக்கே அமைந்துள்ள தரைப்பாலத்தில் மழை நீர் செல்லாத வகையில் உள்ள ஆக்கிரமிப்புகள் மற்றும் முட்புதர்களை அகற்றி 50 மீட்டர் நீளத்திற்கு புதிய பாலம் அமைத்திடவும், மேலும், கந்தாடு ஊராட்சி கானிமேடு பகுதியில் சாலையின் குறுக்கே அமைந்துள்ள பாலத்தினை பார்வையிட்டு பாலத்தின் வழியாக தண்ணீர் புகாத வண்ணம் தடுத்து நிற்கும் ஆக்கிரமிப்பு மற்றும் முட்புதர்களை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தினார்

இதனை தொடர்ந்து நகர் ஏரியிலிருந்து ஓங்கூர் மற்றும் நாகல்பாக்கம் உள்ளிட்ட ஊராட்சிகளின் வழியாக மழைநீர் செல்லும் பாதைகளில் ஏதேனும் ஆக்கிரமிப்புகள் உள்ளதா என்பதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.